**செய்தி வெளியீடு எண்: 548** **நாள் : 31.10.2015**

## செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக 91 அங்காடிகளில் 1.11.2015 அன்று முதல் குறைந்த விலையில் இறக்குமதி துவரம் பருப்பு விற்பனை நடைபெறும்

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் வெளிச்சந்தையில் உயரும் போது, விலைகளை கட்டுக்குள் வைக்கும் தீவிர நடவடிக்கைகளை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** மேற்கொண்டு வருகிறார்கள். தற்போது, துவரம் பருப்பு விலையேற்றத்தினை கட்டுப்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய பெருநகரங்களில் உள்ள கூட்டுறவு பண்டகசாலைகளின் 71 அங்காடிகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் நடத்தப்படும் சென்னையிலுள்ள 20 பல்பொருள் அங்காடிகள் வாயிலாக, இறக்குமதி துவரம் பருப்பு 1/2 கிலோ ரூ.55, 1 கிலோ ரூ.110 என்ற அடிப்படையில் 1.11.2015 அன்று முதல் விற்பனை செய்ய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** உத்தரவிட்டார்கள்.

குறைந்த விலையில் துவரம் பருப்பு விற்பனை சென்னை மாநகரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் அண்ணாநகர் மேற்கு, நந்தனம், அசோக்நகர், ஆர்.கே. மடம் ரோடு, இந்திராநகர், சி.பி.ஆர். சாலை, பெரியார் நகர், எம்.எம்.டி.எ.காலனி, கோபாலபுரம், அண்ணாநகர் மெயின், தம்பு சாமி ரோடு, அண்ணா நெடும்பாதை, தாம்பரம், கே.கே.நகர் மேற்கு, வி.எம்.தெரு, சாந்தி காலனி, திருவான்மியூர், ஆற்காடு சாலை, ஆவடி மற்றும் போரூர் அமுதம் அங்காடிகள், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் தேனாம்பேட்டை, ஆர்.ஏ.புரம், பெசன்ட் நகர், நுங்கம்பாக்கம், திருவல்லிக்கேணி, அசோக்நகர், இராயப்பேட்டை, கீழ்ப்பாக்கம், செனாய் நகர், பெரியார் நகர், மீனம்பாக்கம் மற்றும் துரைப்பாக்கம் சுயசேவைப் பிரிவு விற்பனை நிலையங்கள், பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் அண்ணா நகர், செனாய் நகர் மற்றும் அரும்பாக்கம் விற்பனை நிலையங்கள், வடசென்னை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கொடுங்கையூர், பிராட்வே, மணலி மற்றும் எம்.ஆர்.எப். அங்காடிகள், வண்ணாரப்பேட்டை கூட்டுறவு பண்டகசாலையின் இராயபுரம் மற்றும் பெரியார் நகர் அங்காடிகள், மாம்பலம் தொடக்க கூட்டுறவு பண்டகசாலையின் மேற்கு மாம்பலம் அங்காடி, அடையார் மகளிர் கூட்டுறவு பண்டகசாலையின் அடையாறு அங்காடி, கஸ்தூரிபாய் மகளிர் கூட்டுறவு பண்டகசாலையின் ஆதம்பாக்கம் அங்காடி, சென்னையில் செயல்படும் தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகளான ஜார்ஜ்டவுன் (சௌகார்பேட்டை), பாரதியார் (புதிய வண்ணாரப்பேட்டை), தட்டான்குளம் (சூளை), ஐ.சி.எப்., தண்டையார் நகர் (தண்டையார் பேட்டை), வியாசர்பாடி ஆகிய விற்பனை நிலையங்களிலும், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் நந்தம்பாக்கம், போரூர், மடிப்பாக்கம், தாம்பரம், செம்பாக்கம் மற்றும் குரோம்பேட்டை விற்பனை நிலையங்கள் ஆகிய 56 இடங்களிலும்,

கோயம்புத்தூர் மாநகரில், கோவை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கோவை வடக்கு, நூலக கட்டடம் மற்றும் எஸ்.பி. காலனி அங்காடிகள்,

வேலாண்டிபாளையம் நகர கூட்டுறவு கடன் சங்க வேலாண்டிபாளையம் அங்காடி, சிங்காநல்லூர் நகர கூட்டுறவு கடன் சங்க சிங்காநல்லூர் அங்காடி, எஸ்.ஆர்.எஸ். கூட்டுறவு பண்டகசாலையின் பூ மார்க்கெட் விற்பனை நிலையம், பாப்பநாய்க்கன் புதூர் கூட்டுறவு பண்டகசாலையின் பி.பி.புதூர் அங்காடி, தமிழ்நாடு மாநில போக்குவரத்து தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலையின் சேரன் நகர் அங்காடி, குனியமுத்தூர் கூட்டுறவு பண்டக சாலையின் குனியமுத்தூர் அங்காடி, கோயம்புத்தூர் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க ஆர்.எஸ்.புரம் அங்காடி ஆகிய 10 விற்பனை அங்காடிகளிலும்,

திருச்சி மாநகரத்தில் திருச்சி சிந்தாமணியின் புதூர், என்.எஸ்.பி., சாலை, கைலாசபுரம் மற்றும் ஸ்ரீரங்கம் அங்காடிகள், திருச்சி அமராவதியின் பழைய சரக்கு வாகன சாலை கைலாசபுரம், பொன்மலை, சுப்பிரமணியபுரம் மற்றும் ஸ்ரீநிவாச நகர் அங்காடிகள், ஸ்ரீரெங்கநாத தொடக்க கூட்டுறவு பண்டகசாலையின் ஸ்ரீரங்கம் அங்காடி, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் கூட்டுறவு சங்கத்தின் மங்கம்மாள் சாலை அங்காடி, தென்சென்னை மின்வாரிய ஊழியர்கள் கூட்டுறவு சங்க மன்னார்புரம் மற்றும் வாமடம் அங்காடிகள், திருவானைக்கோயில் கூட்டுறவு சங்க திருவானைக்கோயில் அங்காடி ஆகிய 14 விற்பனை அங்காடிகளிலும்

மதுரை மாநகரில் மதுரை பாண்டியன் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் அரண்மனை சாலை, திருநகர் மற்றும் அழகப்பன் நகர் அங்காடிகள், டி.வி.எஸ் கூட்டுறவு சங்கத்தின் டி.வி.எஸ் நகர் அங்காடி, மதுரா கோட்ஸ் பணியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் பொன்னகரம் மற்றும் கே.கே.நகர் அங்காடி, மதுரை பெண்கள் கூட்டுறவு சங்க ரேஸ் கோர்ஸ் காலனி அங்காடி, தமிழ்நாடு போக்குவரத்து தொழிலாளர்கள் கூட்டுறவு பண்டகசாலையின் பழங்காநத்தம் மற்றும் கே.புதூர் அங்காடிகள், ஸ்ரீ மீனாட்சி மில் தொழிலாளர்கள் கூட்டுறவு பண்டகசாலையின் சுந்தரராஜபுரம் அங்காடி மற்றும் திருமங்கலம் மின்வாரிய பணியாளர்கள் கூட்டுறவு சங்க திருமங்கலம் அங்காடி ஆகிய 11 விற்பனை அங்காடிகளிலும் ஆக மொத்தம் 91 விற்பனை அங்காடிகள் வாயிலாக இறக்குமதி துவரம்பருப்பு ½ கிலோ ரூ.55/— மற்றும் 1கிலோ ரூ.110/— என்ற அடிப்படையில் 01.11.2015 அன்று முதல் விற்பனை செய்யப்படும்.

குறைந்த விலையில் இறக்குமதி துவரம்பருப்பு விற்பனைத் திட்டம் துவங்கப்படும் தினமான 01.11.2015 ஞாயிற்றுகிழமை அன்றும் மேற்கண்ட 91 அங்காடிகளும் திறக்கப்பட்டு குறைந்த விலை இறக்குமதி துவரம்பருப்பு விற்பனை செய்யப்படும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**